திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேப்பந்தட்டையில் உளுந்துப் பயிர் தின விழா**

First Published : 15 Apr 2010 06:08:09 AM IST

பெரம்பலூர், ஏப். 14: பெரம்பலூர் அருகேயுள்ள வேப்பந்தட்டையில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் சார்பில், உளுந்து பயிர் தின விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் ஆர். கவிமணி தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர்கள் பாபு, முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் உளுந்து சாகுபடியின் முக்கியத்துவம், சாகுபடி தொழில்நுட்பங்கள், கூடுதல் மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முனைவர் பாரதிகுமார், உதவிப் பேராசிரியர் பாஸ்கர், முனைவர் ஆனந்த், முன்னோடி விவசாயி ரங்கராஜ் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**அதிகரித்த வெப்பத்தால் மாங்காய் விளைச்சல் பாதிப்பு**

First Published : 14 Apr 2010 09:18:41 AM IST

Last Updated : 14 Apr 2010 11:12:04 AM IST

மேலூர், ஏப். 13: இதுவரை இல்லாத வகையில் நடப்பாண்டில் வெப்பநிலை அதிகரித்து உள்ளதால், அழகர்கோவில் மலை, அலங்காநல்லூர், கரந்தமலைத்தொடர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான மா மரங்களில் மாங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

மாங்காய் வரத்து இன்மையால் சுமார் 200 கிராம் எடையுள்ள மாங்காய் ரூ.15}க்கும், மா வடுவுக்கான பிஞ்சுகள் கிலோ ரூ.50-க்கும் விற்கப்படுகிறது. மாம்பழம் வரத்தும் குறைவாக இருக்கும் என்பதால் நடப்பாண்டில் அவற்றின் விலை மிகமிக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

மா மரங்கள் ஜனவரி மாதத்தில் பூக்கத் தொடங்கி ஏப்ரல் கடைசி முதல், மே மாதத்தில் பழுக்க வைக்க மாங்காய்களை பறிப்பது வழக்கம். அதன்பின் மாம்பழங்கள் மே கடைசியில் மார்கெட்டில் விற்பனைக்கு வரும்.

ஆனால் இந்த ஆண்டு போதிய மழை இல்லாததாலும், அதிகமாக வெப்பம் நிலவுவதாலும், பெரும்பாலான மரங்களில் அடியோடு காய்ப்பு இல்லை.

கல்லாமை, காசாலட்டு போன்ற மா மரங்கள் மிகவும் அரிதாக சில இடங்களில் குறைந்த அளவே காய்த்துள்ளது. மாங்காய் அறுவடை சீசன் தொடங்கும் நிலையில் 90 சதவிகித மரங்கள் இளம் தளிர்விட்டு வளர்ந்து வருகிறது. 10 வயதுடைய நடுத்தர மரத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாக 10 முதல் 20 காய்களே சில இடங்களில் காணப்படுகின்றன.

அழகர்கோவில் மலைச்சரிவில் உள்ள சேக்கிபட்டி, பட்டூர், சாம்பிராணிப்பட்டி, நத்தம் கரந்தமலைத்தொடர் பகுதி, பரளி, அலங்காநல்லூர், பாலமேடு சுற்றுவட்டாரத்திலும் இந்நிலையிலேயே மாந்தோப்புகள் காணப்படுகிறது.

மாங்காய் காய்ப்பின்மையால் சில காய்களையும் பாதுகாக்க இயலாமல் விவசாயிகள் பறித்து மார்க்கெட்டுக்கு கொண்டு வருகின்றனர். அவை ரூ.10 முதல் 15 வரை விற்பனையாகிறது. இதுபோல ஒட்டுமொத்தமாக மா தோப்புகள் காய்காமலிருப்பது இந்த ஆண்டுதான் என்கின்றனர் விவசாயிகள்.

இதுகுறித்து மதுரை தோட்டக்கலைத் துறை அதிகாரி எஸ்.கலைச்செல்வன் (தொழில்நுட்பம்) கூறியதாவது:

இந்த ஆண்டு முற்றிலும் மா மரங்கள் காய்காமல் இருப்பதற்கு பூமியின் வெப்ப உயர்வும், டிசம்பர், ஜனவரியில் மழை பெய்யாததும் காரணமாகும். பெரும்பாலான மா மரத் தோட்டங்கள் மானாவாரியாக மழையை எதிர்பார்த்தே உள்ளன. சில இடங்களில் மா தோப்புக்கு அதிக தண்ணீர் பாய்ச்சுவது தவறானது. இதனால் அதிக தளிர்களுடன் பசுமையாக இருக்கும்.

பூக்கள் நிரம்பியிருப்பினும் காய்த்துப் பலன் தராது. இவ்வாறான தோட்டங்களில் பகுதி பகுதியாக கவாத்து செய்து சூரிய வெளிச்சம் மரத்தில் உள்ளே புகுமாறு செய்ய வேண்டும். 45 முதல் 50 வயதுடைய ஒட்டுரக மா மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி புதிய கன்றுகளை நடவேண்டும்.

பனங்கப்பள்ளி, இமாம் பசந்த், அல்போன்சா, பங்களூரா, ஜகாங்கீர் போன்ற மாமரங்கள் ஓர் ஆண்டில் நன்கு காய்க்கும், மற்றொரு ஆண்டில் சரிவர காய்ப்பதில்லை. ஆனால் இந்த ஆண்டில் கடும் வெப்பம் காரணமாகப் பெரும்பாலான மரங்கள் முற்றிலும் காய்க்கவில்லை என்றார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 71.54 அடி**

First Published : 15 Apr 2010 03:48:30 AM IST

சேலம், ஏப். 14:  மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 71.54 அடியாக இருந்தது. ÷அணைக்கு விநாடிக்கு 2,095 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 34.03 டி.எம்.சி. அணை பகுதியில் புதன்கிழமை காலை 8 மணி வரை 6.8 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**தளிஞ்சி மலைவாழ் மக்களின் இயற்கை விவசாயம்**

First Published : 15 Apr 2010 04:07:19 AM IST

உடுமலை, ஏப். 14: உடுமலை அருகே மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மலைவாழ் மக்கள், மருந்தில்லா இயற்கை விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலங்களை யானைகளிடம் இருந்து பாதுகாக்க சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

÷உடுமலை அருகே தமிழக - கேரள எல்லையில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ள 15-க்கு மேற்பட்ட செட்டில்மென்ட்களில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தேன் சேகரிப்பு, மூலிகைத் தைலம் தயாரிப்பு, விவசாயம் ஆகியவையே இவர்களது வாழ்வாதாரமாக இருந்து வருகின்றன.

÷சின்னார் மலைப் பகுதியில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தளிஞ்சி மற்றும் தளிஞ்சி வயல் கிராமத்தில் தற்போது விவசாயம்  பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றது. இங்குள்ள தளிஞ்சி வயல் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது களை எடுக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

÷110- 120 நாட்களில் அறுவடை செய்யப்படும் இந்த நெல் வகைகளை பெரும்பாலும் மலைவாழ் மக்களே தங்களது சொந்த உபயோகத்துக்கு வைத்துக் கொள்கின்றனர். இதுபோக உடுமலைக்கு விற்பனைக்கும் கொண்டு வருகின்றனர். இயற்கை வேளாண் முறைப்படி நடந்துவரும் விவசாயத்தில் மலைவாழ் மக்கள் எந்த விதமான உரமோ, பூச்சிக்கொல்லி மருந்துகளோ, களைக்கொல்லி மருந்துகளோ பயிர்களுக்கு தெளிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

÷இது குறித்து மலைவாழ்மக்கள் கூறியது:

÷அடர்ந்த வனப்பகுதியில் அமைந்துள்ள இந்த விவசாய நிலங்களில் யானைகள் புகுந்து அட்டகாசம் செய்து வந்தன. ஆகையால் இந்த நிலங்களை சுற்றி மின்வேலி அமைத்துத் தர வேண்டும் என்று கோரி வந்தோம். இந்தக் கோரிக்

கையை ஏற்று வனத்துறையினர் மின்வேலி அமைத்துள்ளதால் தற்போது நாங்கள் பாதுகாப்பாக விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

÷ஐஆர்-50 மற்றும் கல்ச்சர் பொன்னி ஆகிய நெல்களை பயிரிட்டு தற்போது ஒரு மாதமாகி விட்டது. நெல் நாற்றுநடவு முதல் அறுவடைப் பணிகள் வரை அனை
த்து பணிகளையும் நாங்களே இயற்கை விவசாய முறைப்படி செய்கிறோம், என்றனர்.

**அதிக மகசூலுக்கு வேப்பங்கொட்டை கரைசல்**

First Published : 15 Apr 2010 02:13:53 AM IST



சிதம்பரம், ஏப்.14: தமிழக கிராமங்களில் குறைந்த செலவில் அதிகளவு உற்பத்தித் திறனை பெற்றுத் தரும் இயற்கை வேளாண்மை பாதுகாப்பு நடவடிக்கைகள் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

விவசாயிகளின் வயல்கள் மற்றும் தோட்டங்களில் கிடைக்கும் இயற்கை விளை பொருள்களை கொண்டு எளிய வேளாண் தொழில்நுட்பங்களை கொண்டு தயார் செய்யப்படும், பயிர்களை பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வேப்பங்கொட்டை கரைசல் குறித்து விவசாயிகள் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

தயாரிக்கும் முறை: விவசாயிகள் 10 கிலோ வேப்பங்கொட்டையை நன்றாக தூளாக்கி, இருபது லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு நாள் வைத்திருக்க வேண்டும். பின்னர் இதை நன்றாக வடிகட்டி 200 லிட்டர் நீருடன் கலந்து பயிர்களின் மேல் தெளிக்கும் போது 100 கிராம் காதி சோப்பை நன்றாக கலக்க வேண்டும். காதிசோப் கரைசல் பயிர்களின் மீது ஒட்டுவதற்காக உதவும். பின்னர் கைத்தெளிப்பான் கொண்டு காலை மற்றும் மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 10 முதல் 12 டேங்க் வரை தேவைப்படும்.

இவ்வாறு வேப்பங்கொட்டை கரைசல் தெளிப்பதன் வாயிலாக கம்பளிப் புழு, அஸ்வினி, தத்துப்பூச்சி, புகையான், இலை சுருட்டுப் புழு, ஆனைக்கொம்பன், கதிர்நாவாய் பூச்சி ஆகியவை கட்டபடுகின்றன. மேலும் சாம்பல் நோய், மஞ்சள் வைரஸ் நோய் போன்றவை எளிதாக கட்டுப்படுத்தப்படுகிறது.

எனவே தமிழக விவசாயிகள், பண்ணை மகளிர்கள், சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் குறைந்த செலவில், குறைந்த காலத்தில் எளிய வேளாண் தொழில்நுட்பங்கள் கொண்டு தயாரிக்கப்படும் வேப்பங்கொட்டை கரைசல் மூலம் எளிதான முறையில் பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து அதிக லாபமும், மகசூலும் பெறலாம் என அண்ணாமலைப் பல்கலை. வேளாண் விரிவாக்கத் துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்துள்ளார்.

**மாவுப் பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை**

First Published : 14 Apr 2010 09:57:57 AM IST

Last Updated : 14 Apr 2010 11:04:29 AM IST

காரியாபட்டி, ஏப். 13: பயிர்களில் மாவுப் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

திருச்சுழி வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களில் மாவுப் பூச்சி தாக்க வாய்ப்புள்ளது.

வெயில் அதிகரித்தால் இதன் தாக்குதல் தீவிரமாகும். தாக்குதலுக்கு உள்ளான பயிர்களின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி வளர்ச்சி குன்றிவிடும்.

இலை, தண்டு பகுதியில் தேன் போன்ற திரவம் காணப்படும். ஒரு மாவுப்பூச்சி சுமார் 400 முதல் 500 முட்டைகள் வரை இட்டு குறுகிய காலத்தில் வெளிவந்து தாக்குவதால், அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனைக் கட்டுப்படுத்த தாக்குதலுக்குள்ளான பயிர்களை வயல்களில் இருந்து அகற்ற வேண்டும்.
மேலும் ஒரு லிட்டர் தண்ணீரில் தாவரப் பூச்சிகொல்லி மருந்தான வேப்ப எண்ணெய் 2 சதவீத கரைசல் மற்றும் வேப்பங் கொட்டை சாறு 5 சதவீதக் கரைசலை சோப்பு கரைசலுடன் கலந்து தெளிக்க வேண்டும்.

மாவுப் பூச்சியின் தாக்குதல் தீவிரமாகக் காணப்பட்டால், ரசாயன பூச்சிகொல்லி மருந்துகளைத் தெளிக்கலாம். மருந்து தெளித்து 15 நாள்களுக்கு பின் பூச்சிகள் தென்பட்டால், மீண்டும் ஒருமுறை மருந்து தெளித்து மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம் என திருச்சுழி வேளாண் இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**மத்திய அரசின் ஆதரவு விலையில் கொப்பரை கொள்முதல் துவக்கம் : தமிழக அரசு உத்தரவு**

பொள்ளாச்சி : மத்திய அரசின் ஆதரவு விலையில் தமிழகத்தில் கொப்பரை கொள்முதலை துவக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. 'இரு தினங்களில் கொள்முதல் துவங்கப்படும்' என 'டான்பேட்' அதிகாரிகள் தெரிவித்தனர்.தேங்காய் விலை சரிவை சமாளிக்கவும், தென்னை விவசாயிகளை பாதுகாக்கவும், மத்திய அரசு ஆதரவு விலை நிர்ணயம் செய்து கொப்பரை கொள்முதல் செய்கிறது. கடந்தாண்டு கொப்பரை கிலோவுக்கு 44.50 ரூபாய் விலை நிர்ணயித்து கொள்முதல் செய் தது. மார்ச் மாதம் கொள்முதல் செய்யும் கொப்பரையை இருப்பு வைக்க இடமில்லாததால் கொள்முதல் கைவிடப்பட்டது.மேலும், மார்ச் மாதம் வரையிலும் கொப்பரை கொள்முதலுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததால், மறு உத்தரவு வந்தால் கொப்பரை கொள்முதல் துவங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனால் , 'கொப்பரை கொள்முதலை உடனடியாக துவங்க வேண்டும், ஆதரவு விலையை உயர்த்த வேண்டும்' என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.மத்திய அரசு கொடுக்கும் ஆதரவு விலையை மட்டும் விவசாயிகளுக்கு வழங்காமல், மாநில அரசு சார்பில் விவசாயிகளுக்கு பங்களிப்பு தொகை வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர். இந்நிலையில், நடப்பு ஆண்டுக்கு விவசாயிகளிடம் இருந்து கொப்பரை கொள்முதல் செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மத்திய அரசின் 'நேபட்' நிறுவனமும், மாநில அரசின் 'டான்பேட்' நிறுவனம் மற்றும் கூட்டுறவு சொசைட்டி மூலம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு கொப்பரை கொள்முதல் உடனடியாக துவங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.'டான்பேட்' அதிகாரிகள் கூறியதாவது:கொப்பரை கொள்முதலை துவங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து, 'நேபட்', 'டான்பேட்' நிறுவனமும், கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டிகளும் இன்று (நேற்று) ஒப்பந்தம் செய்து கொள்கின்றன. இன்னும் இரண்டு நாட்களில் கொப்பரை கொள்முதல் துவங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தாண்டு கொள்முதல் செய்யப்பட்ட ஆதரவு விலைக்கே தற்போதும் கொள்முதல் நடக்கும் என்றனர்.குழப்பம் தீரவில்லை : கொப்பரை கொள்முதல் செய்தால் இருப்பு வைக்க சேமிப்பு கிடங்கு நிறுவனத்தில் குடோன் வசதியில்லை என்பதால் கடந்த மாதம் கொள்முதல் கைவிடப்பட்டது. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன குடோன்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள கொப்பரைஇன்னும் ஏலம் விடப்படவில்லை. : இந்நிலையில், மீண்டும்

கொப்பரை கொள்முதல் துவங்கப்பட்டுள்ளதாக அறிவித்தாலும், கொள்முதல் தொடர்ந்து நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இருப்பில் உள்ள கொப்பரையை காலி செய்தால் தான் புதிதாக கொப்பரை கொள்முதல் செய்து இருப்பு வைக்க முடியும்.அட்டை புதுப்பிக்கணும்: கொப்பரை கொள்முதல் செய்வதற்கு விவசாயிகளின் தென்னை சாகுபடி பரப்பு, தென்னையில் காய்ப்பு திறன், கொப்பரை உற்பத்தி விகிதம் போன்ற தகவல்களுடன் வேளாண் துறை மற்றும் வருவாய்துறை இணைந்து கொப்பரை கொள்முதல் அட்டை வழங்கி வருகிறது.கடந்தாண்டு அடையாள அட்டை பெற்றவர்கள், இந்தாண்டு அந்த அட்டையை புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் அடையாள அட்டை பெற்றவர்கள் இன்னும் ஒருமுறை கூட கொப்பரை கொள்முதல் செய்யவில்லை. அவர்களும் அந்த அடையாள அட்டையை புதுப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**வீராணம் ஏரியில் மீன் குஞ்சுகள் மீன்வளத்துறை சார்பில் விடப்பட்டது**

சிதம்பரம்: வீராணம் ஏரியில் மீன் வளத்தை பெருக்க மீன் வளத்துறை சார்பில் கெண்டை மீன் குஞ்சுகள் விடப்பட்டுது.வீராணம் ஏரி சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார் கோவில் பகுதி விவசாயிகளின் உயிர்நாடியாக உள் ளது. சென்னைக்கும் இங் கிருந்து தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. சென் னைக்கு தண்ணீர் செல்வதால் ஏரி வற்றாமல் தண் ணீர் தேக்கி வைக்கப் பட்டுள்ளது.தற்போதைய நீர்மட்ட அளவுப்படி 43.5 அடி தண் ணீர் உள்ளது. ஏரியில் ஆண் டுதோறும் ஏலம் விடப் பட்டு மே, ஜூன் மாதங்களில் மீன்கள் பிடிக் கப் பட்டு வருகிறது. இந்த ஆண்டு வீராணம் ஏரியில் தண்ணீர் வற்றாமல் இருப் பதால் மீன் வளத்தை பெருக்க தமிழக மீன் வளத் துறை சார்பில் மீன் குஞ்சுகள் விட முடிவு செய்யப் பட்டது. அதன்படி சென்னை மீன் வளத்துறை உதவி இயக்குனர் தில்லை கோவிந்தன் தலைமையில் ஒரு லட்சத்து 15 ஆயிரம் சாதா கெண்டை மீன்கள் விடப்பட்டது.நிகழ்ச்சியில் சிதம்பரம் உதவி இயக்குனர் கலியமூர்த்தி, மீன் ஆய்வாளர் கள் மனுநீதி சோழன் உள்ளிடோர் பங்கேற்றனர்.

**வறண்டு வரும் வெள்ளி நீர்வீழ்ச்சி கேள்விக்குறியாகும் விவசாயம்**

கொடைக்கானல்: கொடைக்கானல் பகுதியில் மழை இல்லாததால் வெள்ளி நீர்வீழ்ச்சியில் நீர்வரத்து குறைந்து விட்டது. கொடைக்கானலில் பெய்யும் மழை, நீரோடைகளிலிருந்து ஏரியில் கலந்து மறுகால் பாயும் நீர், மழைக்காலங்களில் ஆங்காங்கே உருவாகும் சிறிய அளவிலான ஊற்றுக் கள் இணைந்து வெள்ளிநீர்வீழ்ச்சி வழியாக பழநியின் குடிநீர் ஆதாரமான பாலாறுக்கும், பெருமாள்மலை,பண்ணைகாட்டிலிருந்து உருவாகும் நீரோடைகள் மஞ்சளாறு நீர்தேக்கத்திற்கும் வருகிறது. இவற்றின் மூலம் சுற்று வட்டார கிராமப்பகுதியில் விவசாயப்பணிகள் நடைபெறுகின்றன. தற்போது கொடைக்கானலில் மழையில்லாததால் தண்ணீர் வரத்தும் குறைந்ததால் அடிவாரத்திலுள்ள இரண்டு நீர்த்தேக்கங்களும் குளம் போல் காட்சியளிக்கிறது.கழிவுநீர் சங்கமம்: நீர் ஓடையை யொட்டியுள்ள காட்டேஜ்,ஓட்டல், குடியிருப்பு பகுதிகளிலிருந்து திறந்து விடப்படும் கழிவுநீர் வெள்ளி நீர் வீழ்ச்சிபகுதியில் கலப்பதால் வரும் நீர் துர்நாற்றத்துடன் வருகிறது.தற்போது அருவியில் தண்ணீர் வரத்தும் இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**காஞ்சிபுரம் கலெக்டரிடம் விவசாயிகள் முறையீடு : குறைந்த விலையில் காய்கறி விற்க விருப்பம்**

காஞ்சிபுரம் : 'உழவர் சந்தையில் குறைந்த விலைக்கு காய்கறி விற்க தயாராக இருக்கிறோம். அரசு விடுதிகள், பள்ளிகள், அங்கன்வாடி மையங்களுக்கு உழவர் சந்தையில், காய்கறிகள் வாங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் முறையிட்டனர்.தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக விற்பனை செய்து பயன்பெற முதல்வர் உத்தரவின்பேரில் உழவர் சந்தை துவக்கப்பட்டது. உழவர் சந்தைப் பணிகளை கண்காணிக்க அரசு தோட்டக்கலைத் துறை அதிகாரிகள்

நியமிக்கப்பட்டனர்.காய்கறிகள் பயிரிடும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. விவசாயிகள் காய்கறிகளை உழவர் சந்தைக்கு அரசு பஸ்களில் இலவசமாக ஏற்றிவர அனுமதிக்கப்பட்டனர்.காஞ்சிபுரம் ரயில்வே ரோடில், 2000ம் ஆண்டு உழவர் சந்தை துவக்கப்பட்டது. 50 கடைகளுடன் உழவர் சந்தை துவங்கியது. 250 விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளையும் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்ய அடையாள அட்டை வழங்கப்பட்டது.

துவக்கத்தில் மக்களிடம் வரவேற்பு இருந்தது. தற்போது பத்து கடைகளில் மட்டும் காய்கறிகள் விற்கப்படுகின்றன. பல காய்கறிகள் வியாபாரிகளிடம் வாங்கி விற்கப்படுவதால் பொருட்கள் வாங்க வருவோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது.இது குறித்து நெல்லூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி குணசுந்தரி(51) கூறியதாவது:எனக்கு சொந்தமான நிலத்தில் விளையும் காய்கறிகளை உழவர் சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்கிறேன். கடந்த ஒரு வருடமாக காய்கறிகள் வாங்க வருவோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது.நாங்கள் கொண்டு வரும் காய்கறிகளை பகல் ஒரு மணி வரை வைத்திருக்க வேண்டியுள்ளது. சில விவசாயிகள் பொருட்களை உழவர் சந்தைக்கு கொண்டு வராமல் வெளி மார்க்கெட்டில் குறைந்த விலைக்கு மொத்தமாக விற்றுவிட்டு செல்கின்றனர்.காஞ்சிபுரம் நகரில் நகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள், அரசு விடுதிகள், அங்கன்வாடிகளில் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. அதற்கு தேவையான காய்கறிகளை உழவர் சந்தையில் வாங்கும்படி சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிடவேண்டும்.பள்ளி மற்றும் விடுதிகளுக்கு தரமான காய்கறிகளை குறைந்த விலைக்கு வழங்க விவசாயிகள் தயாராக உள்ளோம். இதன் மூலம் உழவர் சந்தை சிறப்பாக செயல்பட வழி கிடைக்கும். விவசாயிகளும் பயன்பெறுவர். இவ்வாறு குணசுந்தரி கூறினார்.

**கரூரில் பொய்த்துப்போன வடகிழக்கு பருவமழை : சொட்டுநீர் பாசனம் பின்பற்ற விவசாயிக்கு அட்வைஸ்**

கரூர்: கரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை போதியளவு பெய்யாததால் விவசாயிகள் சொட்டுநீர் பாசனத்தை பின்பற்ற தோட்டக்கலைத்துறை அறிவுறுத்தியுள்ளது. தாந்தோணி வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் அறிவித்துள்ளதாவது: வடகிழக்கு பருவமழை பொய்த்ததால், கண்மாய்களில் நீர் இருப்பு இல்லை. நடப்பாண்டு கோடைப்பருவம் முன்னதாகவே துவங்கிவிட்டதால் நீர்நிலை வறண்டுவிட்டன. கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் பயிர்களுக்கு கிடைக்கும் பாசன நீர் அளவும் குறைந்துள்ளது. தற்போது வறட்சியான காலகட்டத்தில் இருக்கும் குறைந்தளவு நீரை கொண்டு கூடுதல் பரப்புக்கு பாசனம் செய்ய சொட்டுநீர்பாசனம் பெரிதும் துணைபுரிகிறது. சொட்டுநீர் பாசனம் என்பது கிடைக்கும் குறைந்த அளவிலான பாசன நீரை, பிளாஸ்டிக் குழாய் மூலம் நேரடியாக பயிர் வேர்பகுதியில் சொட்டுவான் மூலம் பயிருக்கு தேவையான நேரத்தில் தேவையான அளவில் அளிப்பதாகும்.

பாசன நீர்த்தட்டுப்பாடு உள்ள இடம், மேட்டுபாங்கான நிலம், மணல்சாரியான நிலம், கரடுமுரடான தரிசு நிலம், மேடு பள்ளம் அதிகம் உள்ள மலைத்தோட்ட நிலம் மற்றும் பிரச்னைக்குரிய களர் மற்றும் உவர் நிலம் மற்றும் கழிவு நீரினால் பாதிப்புக்குள்ளான பகுதியில் சொட்டு நீர்பாசன முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சொட்டு நீர்பாசன முறையில் நீர் பயன்படும் திறன் 60 முதல் 80 சதவீதம் வரை அதிகரிக்கிறது. பாசன நீர் 50 சதவீதம் சேமிக்கப்படுகிறது. சேமிக்கப்படும் நீரினால் 40 சதவீதம் வரை கூடுதல் பரப்பில் பயிர் சாகுபடி செய்யமுடிகிறது. பாசன நீரின் கரையும் உரம் அளிக்க முடிவதால் உரங்களின் பயன்படுதிறன் 70 சதவீதம் வரை அதிகரிக்கிறது. பாசன நீர் மூலம் உரமிடுவதால் உரத்தேவையில் 30 சதவீதம் வரை குறைகிறது. பயிருக்கு தேவையான இடங்களில் மட்டுமே பாசனம் செய்யப்படுவதால் களை வளர்வது 40 சதவீதம் வரை கட்டுப்படுத்தப்படும். பயிருக்கு தேவையான அளவில் தேவையான நேரத்தில் மட்டும் நீர்பாசனம் செய்யப்படுவதால் மின் உபயோகம் 60 சதவீதம் வரை குறைகிறது. சொட்டு நீர்பாசனம் தேவையான நேரத்தில் சீராகக் கிடைப்பதால் தரமான விளைபொருள் உற்பத்தி செய்ய முடிகிறது. நிலம் சமப்படுத்துவதால், பாத்தி கட்டுதல், களையெடுத்தல் மற்றும் உரங்கள் இடுவதற்கான வேலையாட்களின் கூலி குறைவு.

வேளாண் மூட்டுவழிச்செலவு 40 சதவீதம வரை குறைகிறது.

குறைந்த செலவில் தரமான விளை பொருளை கூடுதலாக உற்பத்தி செய்ய முடிவதால் 60 சதவீதம் வரை கூடுதலாக லாபம் கிடைக்கிறது.வரிசையில் சீராக நடப்படும் மரவள்ளி, மஞ்சள், வாழை, தென்னை, மா, நெல்லி, கரும்பு மற்றும் பருத்தி போன்ற பயிர்களும் பெரும்பாலான காய்கறிகளும், சொட்டு நீர்பாசன முறையில் பயிர் செய்ய ஏற்றதாகும்சொட்டு நீர்பாசனக் கருவிகளை அமைக்க மத்திய, மாநில அரசு இணைந்து 65 சதவீதம் மானியம் அளிக்கிறது. ஒரு குடும்பத்துக்கு அதிகபட்சம் ஐந்து ஹெக்டர் வரையிலான பரப்புக்கு நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது. நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் மானியம் பெறவிரும்பும் விவசாயிகள் சிட்டா, பட்டாவின் கணிப்பொறி நகல், அடங்கல் 10(1)ன் அசல் நகல், நிலத்தில் கிணறு அமைத்துள்ளதை காட்டும் வரைபடம் உண்மை நகல், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ மூன்று, ரேஷன் கார்டு நகல் ஆகிய ஆவணங்களுடன் தாந்தோணி வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர்களை அணுகி மானிய விலையில் சொட்டுநீர்பாசன கருவிகளை தங்கள் தோட்டத்தில் அமைத்துக் கொள்ளலாம். தோட்டக்கலைதுறை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் 99947 75748, தோட்டகலை அலுவலர் நடராஜன் 92454 64468, உதவி அலுவலர்கள் பரமேஸ்வரன், செந்தில்குமார், சுமதி ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு புல் வெட்டும் கருவி வழங்கல்**

ருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புல்வெட்டும் கருவிகளை விவசாயிகளுக்கு கலெக்டர் சண்முகம் வழங்கினார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கரும்பு சோகையை கொண்டு ஊறுகாய் புல் தயாரித்தல் திட்டம் மற்றும் விவசாயிகளுக்கு புல்வெட்டும் கருவி வழங்கும் விழா கிருஷ்ணகிரி மாவட்ட உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் சண்முகம் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்பு உதவி இயக்குனர் டாக்டர் அருண்மொழிதேவன் முன்னிலை வகித்தார். தீவனப் பயிர் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் 4 ஏக்கர் வீதம் 40 ஏக்கரில் 52 சுய உதவிக்குழு மற்றும் ஆத்மா திட்ட விருப்பக் குழுவினருக்கு ஏக்கருக்கு 5,000 ரூபாய் மானியம் வீதம் 2 லட்ச ரூபாய் வழங்கப்பட்டது. சுய உதவிக்குழுவினர்களுக்கு செம்மறியாடுகள் வழங்குதல் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்துக்கு ஒரு குழு வீதம் 10 சுய உதவி குழுவினருக்கு மானியமாக 2 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

தர்மபுரி மண்டல இணை இயக்குனர் (பொறுப்பு) டாக்டர் தயாநிதி திட்ட விளக்கவுரையாற்றினார். டாக்டர் முருகேசன் தீவன புல் வெட்டும் கருவி செயல்முறை விளக்கம் செய்து காட்டினார். தர்மபுரி உதவி இயக்குனர் டாக்டர் பாலசுப்பிரமணியன், கிருஷ்ணகிரி மாவட்ட கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் டாக்டர் கந்தசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஓசூர் கோட்ட உதவி இயக்குனர் டாக்டர் ஜெயராமன் நன்றி கூறினார்.

**வெற்றிலை பிரி திருவிழா**

மேலூர்: சித்திரை தினத்தில் விவசாயம் செழிக்க வேண்டி மேலூர் அருகே வெற்றிலை பிரி திருவிழா நடைபெற்றது. மேலூர் அருகே வெள்ளலூர் பகுதி உள்ளது. இப் பகுதியில் மொத்தம் ஐந்து மாகாணங்கள், அதில் 50க்கு மேற்பட்ட கிராமங்கள் என உள்ளது. சித்திரை தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளலூர் மந்தையில் உள்ள மந்தை கருப்பண சாமி கோயிலின் முன்பு அனைத்து கிராம மக்களும் கூடினர். 22 அம்பலகாரர்கள் மற்றும் 22 இள கச்சிகள் எனப்படுபவர்கள் குவிந்திருந்த வெற்றிலை கட்டுகளில் இருந்து சிறு சிறு கட்டுகளாக பிரித்தனர். இவற்றை கிராம வாரியாக பிரித்து கொடுத்தனர். அக்கட்டுகளை பெற்ற கிராமத் தலைவர்கள் அவற்றை தங்கள் ஊரில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப

புள்ளி கணக்காக பிரித்து கொடுத்தனர். இவ்வெற்றிலைகளை பெற்றுக் கொண்டவர்கள் வீட்டில் விவசாய பொருட்களுடன் அவற்றை வைத்து பூஜை செய்தனர். பின்னர் வயல் வெளிக்கு சென்று முதற்கட்ட விவசாயப் பணியான குப்பைகளை கொட்டி தங்கள் பணிகளை மேற்கொண்டனர்.

**இயந்திரமயத்தில் தரமான விதைநெல் அறுவடை : விவசாயக் கல்லூரி சாதனை**

மதுரை: நெல்நடவு முதல் அறுவடை வரை இயந்திரமயத்தின் மூலம், நெல்விதைகள் அதிகளவு உற்பத்தி செய்து, மதுரை விவசாயக் கல்லூரி சாதனை படைத்துள்ளது.
ஆட்கள் பற்றாக்குறை, கூலி விலை உயர்வால் விவசாயத்தை பலர் கைவிடுகின்றனர். விவசாயக் கல்லூரி, பல்கலையில், விவசாயிகளை நவீனபாணி விவசாயத்துக்கு மாற்றுவதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயத்தில் வேலை அதிகம், கூலி குறைவு என்ற நிலை இருப்பதால், ஆட்கள் கிடைப்பதில் நெருக்கடி நிலவுகிறது.

இயந்திரமயத்தின் மூலம் விவசாயம் செய்வது தற்போது எளிதான விஷயமாகி விட்டது. மதுரை விவசாயக் கல்லூரியில் 120 ஏக்கர் நெல் சாகுபடி பரப்பு உள்ளது. நடவு முதல் அறுவடை வரை இயந்திரமயத்தை பயன்படுத்தி, கடந்த பத்தாண்டுகளுக்கு பிறகு 120 ஏக்கர் பரப்பில் 300 டன் விதைநெல் அறுவடை செய்யப் பட்டுள்ளது. இதுகுறித்து கல்லூரி டீன் வைரவன் கூறியதாவது :நெல் விதையை நடுதல், நாற்று எடுத்தல், மீண்டும் நடுதல், களையெடுத்தல், சொட்டுநீர் பாசனம், அறுவடை வரை அனைத்தும் இயந்திரத்தின் மூலம் செய்யப்பட்டது. விதை நடும் போது மட்டும் 120 ஏக்கரில் ஒரே நேரத்தில் பயிரிடவேண்டுமென்பதால், இயந்திரம் மற்றும் ஆட்கள் மூலம் நடவு செய்தோம். டீலக்ஸ் பொன்னி ரகம், ஆடுதுறை 39, 45 ரக நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனவே விவசாயிகள் ஆட்கள் பற்றாக்குறையை காரணம் காட்டி, உற்பத்தியை கைவிடுவதை விட இயந்திரமயத்துக்கு மாறலாம். குறைந்த நேரம், குறைந்த செலவில் இயந்திரம் அனைத்து வேலைகளையும் செய்துவிடும். விவசாயத்துக்குத் தேவையான தரமான நெல்விதைகள் கையிருப்பில் இருப்பதால், விவசாயிகள் கல்லூரியை அணுகலாம் என்றார்.

**.வாய்க்கால்கள் தூர்வாரும் பணியை விரைந்து தொடங்க அரசுக்கு விவசாயிகள் வலியுறுத்தல்**

முத்துப்பேட்டை : முத்துப்பேட்டை ஒன்றியத்தில் வாய்க்கால்களை தூர்வாரும் பணியை விரைவில் தொடங்க வேண்டும் என்று அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.முத்துப்பேட்டை ஒன்றிய விவசாய நிலங்களுக்கு பாமணியாறு மற்றும் கோரையாறு வாயிலாக பாசன வசதி கிடைத்து வருகிறது. இதன்மூலம் 35 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இதில் கடந்தாண்டு 34ஆயிரத்து 500 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. மேட்டூரில் நீர் திறக்கப்பட்ட மறு வாரத்தில் தான் ஒன்றியப்பகுதி பாசன வாய்க்கால்களுக்கு நீர் வந்தடைகிறது. இதற்கு காரணம் ஆறுகள் மற்றும் பாசன வடிகால்கள் முறையாக தூர்வாரப்படாததுதான். வயல்களுக்கு வரும் கிளை வாய்க்கால்களும் தூர்ந்து கிடக்கின்றன. நீரைதேக்கி வைக்க பயன் தரும் பாசன ரெகுலேட்டர்கள், மதகுகள் ஆகியனவும் பராமரிப்பின்றி உள்ளன. இதனால் முத்துப்பேட்டை ஒன்றியத்தில் ஆண்டுதோறும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். வெள்ளப்பெருக்கு அல்லது வறட்சி என பாதிப்புகள் மாறி மாறி வருவதால் விவசாயிகள் பொருளாதாரத்தில் நலிவடைந்து வருகின்றனர். ஆறுகள், பாசன வடிகால்கள், கிளை வாய்க்கால்கள் ஆகியவற்றை முறையாக தூர்வாரினால்தான் விவசாய பாதிப்பு குறையும். வெள்ள நீரை வேகமாக வடியவும் இயலும். குறைந்தளவு நீர்வரத்து வரும் போதும் வயல்களுக்கு தடையின்றி தண்ணீரை கொண்டு செல்ல முடியும். எனவே முத்துப்பேட்டை ஒன்றியத்தில் தூர்வாரும் பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இதுகுறித்து விவசாயிகள் தரப்பில் கூறுகையில், தூர்வாரும் பணிகளை எந்தவித குறைவுமின்றி செய்து தரவேண்டியது அவசியம். முத்துப்பேட்டை ஒன்றியத்துக்கு பாமணியாறு, கோரையாறு மற்றும் கிளை தாங்கியாறு,

மரைக்காகோரையாறு, கந்தபரிச்சானாறு, வளவனாறு, பழம்பாண்டியாறு ஆகியவற்றின் வாயிலாக நீர் ஆதாரம் கிடைத்து வருகிறது. மேட்டூரில் திறந்து விடப்படும் தண்ணீர் தடையின்றி விவசாய நிலங்களை சென்றடைய வேண்டுமானால் அனைத்து ஆறுகள், வாய்க்கால்கள் முழு கண்காணிப்புடன் தூர்வாரப்பட வேண்டும். அனைத்து சிறு, குறு வாய்க்கால்களையும் அகலப்படுத்த வேண்டும். பொதுப்பணித்துறையினர் பாசன மதகுகள், ரெகுலேட்டர்களை சீரமைத்து தரவேண்டும் என்றனர்.

**.நெல், அரிசி கொள்முதல் செய்யும் நிறுவனங்கள்: கலெக்டர் அறிவுறுத்தல்**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் 10 ஆயிரம் மெ.டன்னுக்கு மேல் நெல் மற்றும் அரிசி கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் உரிய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

எந்த ஒரு நிறுவனமோ அல்லது தனிநபரோ நெல் மற்றும் அரிசி 10 ஆயிரம் மெ.டன்னுக்கு அதிகமாக கொள்முதல் செய்தால் அது பற்றிய அறிக்கையை, உரிய படிவத்தில் மத்திய அரசு நிர்ணயித்துள்ள கால இடைவெளிக்குள், சென்னை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு முதன்மை செயலா ளரிடம் அளிக்க வேண்டும்.

25 ஆயிரம் மெ.டன்னைவிட அதிகமாக நெல் மற்றும் அரிசி கொள்முதல் செய்தால் அது பற்றிய விபர அறிக்கையை டெல்லி கிரிஷிபவனில் உள்ள உணவு மற்றும் பொது விநியோகத்துறை அரசு சார்பு செயலாளரிடம் அளிக்க வேண்டும். இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**பண்ணை மகளிர் குழுக்களுக்கு வேளாண் கருவிகள் வழங்கல்**

கபிஸ்தலம்: பண்ணை மகளிர் குழுக்களுக்கு கோனோவீடர் மற்றும் மார்க்கர் கருவிகள் வழங் கும் விழா நடந்தது.தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பண்ணை மகளிர் குழுக்களுக்கு கோனோவீடர் மற்றும் மார்க்கர் வழங் கும் விழா பாபநாசத்தில் நடந்தது. ஒன்றியக்குழு தலைவர் சேதுராமன், துணைத் தலைவர் தாமரைச்செல்வன் ஆகியோர் பாபநாசம் வட்டாரத்தில் செயல்படும் 44 பண்ணை மகளிர் குழுக்களுக்கு தலா 5 கோனோவீடர் மற்றும் 1 மார்க்கர் கருவிகள் வழங்கினர்.

இதன்மூலம் பண்ணை மகளிர் குழுக்கள் செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு இந்த கருவிகளை வாடகைக்கு விட்டு அதன் மூலம் தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ள வழிவகை செய் யப்பட்டு உள் ளது.ஏற்பாடுகளை பாபநாசம் வேளாண் உதவி இயக்குனர் பொறுப்பு பாண்டியராஜன், வேளாண் துணை அலுவலர் பழனிச்சாமி, வேளாண் அலுவலர் ஆனந்தப்பிரியா, உதவி வேளாண் அலுவலர்கள் முனுசாமி, ஞானராஜராஜன் ஆகியோர் செய்து இருந்தனர்.

**வாழை பயிர் விளைச்சல் போட்டி மாதாபுரம் விவசாயி முதலிடம்**

தென்காசி:கடையம் வட்டாரத்தில் நடந்த மாவட்ட அளவிலான வாழை பயிர் விளைச்சல் போட்டியில் மாதாபுரம் விவசாயி முதல் பரிசு பெற்றார்.இதுகுறித்து கடையம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயக்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:கடையம் வட்டாரத்தில் 2009-10ம் ஆண்டு மாவட்ட அளவிலான வாழை பயிர் மகசூல் போட்டி மாதாபுரம் நடராஜன் வாழை தோட்டத்தில் நடந்தது. ஜி9 ஒன்ற திசு வாழை கன்றுகளை தோட்டக்கலை துறையின் சிபாரிசின் பேரில் கோயம்புத்தூரில் இருந்து பெற்று நடராஜன் நடவு செய்தார். வாழை பயிருக்கு சொட்டு நீர் பாசனம் மூலம் நீர் பாய்ச்சப்பட்டது. சொட்டு நீர் பாசனம் மலம் உர கரைசல் தேவைக்கேற்ப

பயன்படுத்தப்பட்டது.திசு வாழை வளர்ப்பு அதிக மகசூல் கொடுப்பதோடு ஒரே சமயத்தில் முதிர்ச்சியடைந்து மிக வேகமாக அறுவடைக்கு வரக்கூடியது. மண்ணில் இருந்து தாக்க கூடிய பூஞ்சானங்கள், நூற்புழுக்கள் மற்றும் நச்சுரி நோய்கள் இல்லாத திசு வாழை கன்றுகள் பெற முடியும்.

இக்கன்றுகள் வேகமாக வளர்ச்சியடைந்தாலும் அதிக எண்ணிக்கையில் பச்சை இலைகளை கொண்டிருப்பதாலும் ஒரு மாதத்திற்கு முன்பே அறுவடைக்கு வந்து விடும்.தாரின் அளவு பெரிதாக இருப்பதோடு காய்கள் மற்றும் சீப்புகளின் எண்ணிக்கையும் அதிகமாக காணப்படும். திசு வாழை கன்றுகள் சொட்டு நீர்பாசனம் மற்று சொட்டு நீர் உர பாசன முறையில் அதிக மகசூல் அளிக்கும்.முன்னோடி விவசாயி நடராஜன் மாவட்ட அளவிலான வாழை பயிர் மகசூல் போட்டிக்கு பதிவு செய்து அறுவடை நடந்தது. நடுவர்களாக முன்னோடி விவசாயிகள், அரசு சார்பில் தோட்டக்கலை தென்காசி உதவி இயக்குநர் மதியழகன் செயல்பட்டனர். வாழை தார் எடை போடப்பட்டது. ஒரு ஹெக்டேர் பரப்பிற்கு 70.600 மெட்ரிக் டன்கள் என்ற அளவில் மகசூல் பெறப்பட்டது. இதனால் நடராஜன் மாவட்ட அளவிலான வாழை பயிர் போட்டியில் முதல் பரிசு பெற்றார். இவருக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் கட்சிஜமால் வழங்கினார்.நிகழ்ச்சியில் தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜாசிங், பாண்டியன், துணை வேளாண்மை அலுவலர் லட்சுமண பெருமாள், தேØட்டக்கலை அலுவலர் ஜெகநாதன் மற்றும் கலந்து கொண்டனர் என தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயக்குமார் அறிக்கையில் கூறியுள்ளார்.

**கீழ்பூதேரி கிராம பகுதியில் மணிலா செடிகள் வாடின**

புதுச்சேரி: திண்டிவனம் கீழ்பூதேரி பகுதியில் தண்ணீர் வசதி கிடைக்காமல் பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட் டுள்ள மணிலா செடிகள் காய்ந்து கிடக்கின்றன.
திண்டிவனம் தாலுகா ஒலக்கூர் ஒன்றியத்திற்குட் பட்ட கீழ்பூதேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் பாசனம் கிடைக்கவில்லை. இப்பகுதியில் பருவ மழை மற்றும் கிணற்று நீரையும் நம்பி விவசாயிகள் மானாவாரிப் பயிராக பல ஏக்கரில் மணிலா பயிரிட்டுள்ளனர். கோடை வெயிலில் கிணறுகளிலும் தண்ணீர் வற்றியதால் கீழ்பூதேரி கிராமத்தில் பல இடங்களில் பயிரிடப்பட் டுள்ள மணிலா செடிகள் கருகிக் கிடக்கின்றன.

**தேங்காய் உரிக்க தொழிலாளர்கள் வருகைகுறைந்தது! வேதனையில் பல்லடம் பகுதி விவசாயிகள்**

பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் சுட்டெரிக்கும் வெயில் காரணமாக, தேங்காய் உரிப்பு பணிக்கு வரும் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது; இதன் எதிரொலியாக, தோப்புகளில் மலை போல் குவிந்து கிடக்கும் தேங்காய்களை உரித்து, பணம் பார்க்க முடியாமல், விவசாயிகள் வேதனையில் தத்தளிக்கின்றனர்.பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங் களில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. காய்ப்புக்கு வந்துள்ள ஒவ்வொரு தென்னை மரத்திலும் 40 நாட்களுக்கு ஒரு முறை தேங்காய் பறிப்பு நடக்கிறது.ஒரு மரம் குறைந்தபட்சம் ஆண்டுக்கு 180 தேங்காய் முதல் 200 தேங்காய்கள் வரை கொடுக்கின்றன. மரத்தில் காய்ந்த மட்டையுடன் பறிக்கப்படும் தேங்காயில் இருந்து மட்டையை உரித்து, தேங்காயை வெளியே எடுக்கும் தொழிலாளர்களுக்கு, 100 காய்க்கு 40 ரூபாய் கூலியாக வழங்கப்படுகிறது.பல்லடம், சுல்தான்பேட்டை வட் டாரங்களில் கடந்த மூன்றாண்டுகளாக, தேங்காய் உரிக்கும் பணிக்கு தொழிலாளர் கள் பற்றாக்குறை நீடித்து வருகிறது. ஏனெனில், கடப்பாரை கம்பியில் நெம்பி, தேங்காயை உரிக்கும் போது, எதிர்பாராத விதமாக கம்பியில் கை, உடம்பு பட்டு விட்டால், ரத்தக்காயம் ஏற்படும். சில சமயம் பெரியளவில் காயம் ஏற்பட்டு, ரத்தம் வெளியேறி உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது; இதனால், புதிதாக தேங்காய் உரிப்பு தொழிலுக்கு பலர் வருவதற்கு அச்சப்படுகின்றனர்.

பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் ஒரு வாரமாக வெயில் கடுமையாக சுட்டெரித்து வருகிறது. வெயிலால் தேங்காய் உரிப்புக்கு வருவதை, தொழிலாளர்கள் தவிர்த்து வருகின்றனர். வெட்ட வெளியில் இல்லாமல், தோப்பு நிழலில் குவித்து போடப்பட்டிருக்கும் தேங்காய்களில் இருந்து மட்டும் மட்டைகளை தொழி லாளர்கள் உரிக்கின்றனர். இப்பகுதியில் பெரும்பாலான தோப்புகளில், வெட்ட வெளியில்தான், தேங்காய்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளன.வெயில் தாக்கம் காரணமாக, தொழிலாளர்கள் தேங்காய் உரிப்புக்கு வருவதை தவிர்த்து வருவதால் 600க்கும் மேற்பட்ட தென்னந்தோப்புகளில் மட்டையுடன் கூடிய தேங்காய்கள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன.

இதன் காரணமாக, தேங்காய்களை, திருப்பூர், கோவை, திண்டுக்கல், மதுரை, தூத்துக் குடிக்கு அனுப்பி, பணம் பார்க்க முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.பெரிய தென்னை விவசாயிகள் மட்டும் உடுமலை, அமராவதி, திண்டுக்கல் பகுதியில் இருந்து தேங்காய் உரிப்புக்கு தொழிலாளர்களை அழைத்து வருகின் றனர்; அவர்களுக்கு வழக்கத்தைவிட காய் ஒன்றுக்கு 10 காசு கூடுதலாக கூலி கொடுக்கின்றனர்; மேலும் சில சலுகை கள் செய்து தருவதாகக்கூறி தோப்புக்கு அழைத்து வருகின்றனர். நடுத்தர விவசாயி கள், தேங்காய்களை உரிய நேரத்தில் உரிக்க முடியாமல் தொடர்ந்து பாதிப் படைந்து வருகின்றனர்.தென்னை விவசாயிகளின் இப் பிரச்னைக்கு தீர்வு காண, எளிதாகவும், வேகமாகவும் தேங்காய் உரிக்கும் இயந் திரங்களை வேளாண் துறையினர் விவ சாயிகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்; அவை குறைந்த விலையில் கிடைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

---

**சின்ன சின்ன செய்திகள்**

ஏப்ரல் 13,2010,16:57 IST



தீவிர பருத்தி பெருக்கத்திட்டம்: மதுரை மாவட்டத்தில் 2009-2010ம் ஆண்டில் வேளாண்மைத்துறை மூலம் மத்திய,மாநில நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மானியத் திட்டம்.

**திட்ட விபரம் மானியம்**

கருவிதை வினியோகம் முழு மானியம் (அ) அதிகபட்சம்ரூ.125/-கிலோ

ஆதாரவிதை உற்பத்தி 50% (அ) ரூ.50/- கிலோ

சான்று விதை உற்பத்தி 25% (அ) ரூ.15/- கிலோ

விதை நேர்த்திமருந்து வினியோகம் 50% (அ) ரூ.40/- கிலோ

உயிரியல் மருந்துகள் வினியோகம் 50% (அ) ரூ.900/- எக்டர்

சான்று விதை வினியோகம் ரூ.20/- கிலோ
விசைத்தெளிப்பான் வினியோகம் 50% (அ) ரூ.800/எண்
செயல்விளக்கத் திடல் அமைத்தல் ரூ.2000/-ஏக்கர்
உயிர் உரங்கள் வினியோகித்தல் 25% (அ) ரூ.25/ எக்டர்
பருத்தியில் பயறு ஊடுபயிர் 25% (அ) ரூ.40/ எக்டர்
நுண்ணூட்ட உரம் வினியோகம் 25% (அ) ரூ.120/எக்டர்
வயல்வெளிப் பள்ளி ஒன்றுக்கு ரூ.17,000/ பள்ளி
விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் ரூ.5000/-
கல்விச்சுற்றுலா ரூ.50,000/-
கருத்தரங்கு ரூ.75,000/-
பயனாளிகள்: பருத்தி சாகுபடி செய்யும் சிறு / குறு / இதர விவசாயிகள்
**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்:** கிராம அளவில் வேளாண்மை உதவி அலுவலர். வட்டார அளவில் துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை அலுவலர்,வேளாண்மை உதவி இயக்குனர். மாவட்ட அளவில் வேளாண்மை துணை இயக்குனர், வேளாண்மை இணை இயக்குனர்
**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

இயற்கை விவசாயம்: ஒரு நாள் பயிற்சி. காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை. எல்லா மாதங்களிலும் இரண்டாவது மற்றும் நான்காவது ஞாயிற்றுக்கிழமைகளில் திண்டுக்கல் செம்பட்டி அருகே 'ஆதிலட்சுமிபுரம் இயற்கை பண்ணை'யில் பயிற்சி அளிக்கப்படுகிறது.
மண்புழு வளர்ப்பு, மரம் வளர்ப்பு, மாடித்தோட்டம், இந்தூர் கம்போஸ்டிங், கரிமச்சத்து, பல்லுயிர் வேளாண்மை, மூடாக்கு முறைகள், செலவு இல்லாத பஞ்சகவ்யம், தேவாம்ருதம், விருட்சாயுர்வேத நீரூட்டங்கள், மூலிகைப் பூச்சி விரட்டி ஆகியவை கற்றுத்தரப்படுகிறது. **(தகவல்: ஆர்.எஸ்.நாராயணன், லட்சுமி சேவா சங்கம், காந்திகிராமம்-624** 302, தொடர்புக்கு 94421 13588)

**நவீன தொழில்நுட்பம்**
ஏப்ரல் 13,2010,16:55 IST



**தென்னையில் ஊடுபயிர் சாகுபடி:** சேனைக்கிழங்கு: ஸ்ரீ பத்மா, கஜேந்திரா போன்ற ரகங்கள் தென்னையில் ஊடுபயிர் சாகுபடிக்கு ஏற்றவைகளாகும். வண்டல் மண் மற்றும் செம்மண்ணில் நன்கு வளரும். ஏப்ரல்-மே மாதங்கள்

சேனைக்கிழங்கு நடவு செய்ய ஏற்ற பருவமாகும். இரண்டு தென்னை வரிசைக்கு நடுவில் கிழக்கு மேற்காக பார்கள் அமைத்து 75 செ.மீ. x 75 செ.மீ. இடைவெளியில் கரணைகளை நான்கு வரிசைகளில் நடவுசெய்ய வேண்டும். ஒரு எக்டர் நடவு செய்ய 3500 கிலோ கிழங்குகள் தேவைப்படும்.

**உர நிர்வாகம் எக்டருக்கு**

தொழு உரம் (அ)

கம்போஸ்ட் (டன்) 25

தழைச்சத்து (கிலோ) 80

மணிச்சத்து (கிலோ) 60

சாம்பல்சத்து (கிலோ) 100

**அறுவடை:** நடவு செய்த 8வது மாதத்தில் கிழங்குகள் முற்றி அறுவடைக்கு வரும். சேனைக்கிழங்கு ஊடுபயிர் செய்வதால் கிடைக்கும் லாபம் ரூ.16,700/- ஆகும்.

**அன்னாசி:** மொரீசியஸ் ரக அன்னாசி தென்னையில் ஊடுபயிர் செய்ய சிறந்தது. மார்ச் - ஏப்ரல் (அ) செப்டம்பர் மாதங்கள் நடவுக்கு ஏற்ற பருவமாகும்.

**இடைவெளி:** 25 x 25 அடி இடைவெளியுள்ள இரண்டு தென்னை வரிசைகளுக்கு மத்தியில் 90 செ.மீ. x 90 செ.மீ. இடைவெளியில் கிழக்கு மேற்காக 4 வரிசைகளில் பார்கள் அமைத்து அன்னாசி கன்றுகளை நடவேண்டும். ஒரு எக்டர் தென்னந் தோப்பில் 9250 அன்னாசி கன்றுகளை நடலாம்.

**உர நிர்வாகம் எக்டருக்கு**

சத்து (செடி ஒன்றுக்கு)

தொழு உரம் (அ)

கம்போஸ்ட் (டன்) - 50

யூரியா (கிராம்) - 16

சூப்பர் பாஸ்பேட் (கிராம்) - 4

மூரியேட் ஆப் பொட்டாஷ் (கிராம்) - 12

**அறுவடை:** 18 முதல் 24 மாதங்களில் அறுவடைக்கு தயாராகும். ஒரு எக்டரில் அன்னாசியை ஊடுபயிர் செய்வதால் ரூ.24,500/- நிகரலாபம் கிடைக்கிறது. (தகவல்: ப.ச.சுப்பிரமணியம், செ.மோகன் தாஸ் மற்றும் க.சாந்தி, தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம்)

**மரவள்ளி கோ.2 ரகம்** தென்னையில் ஊடுபயிர் செய்ய ஏற்றது. வடிகால் வசதியுள்ள மணற் பாங்கான செம் மண்ணில் மரவள்ளி நன்கு வளரும். நீர்பாசனம் உள்ள இடங்களில் ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம்.

**இடைவெளி:** 25 x 25 அடி இடைவெளியுள்ள இரண்டு தென்னை வரிசைகளுக்கு நடுவில் 75 செ.மீ. x 90 செ.மீ. இடைவெளியில் கிழக்கு மேற்காக நான்குவரிசைகளில் பார்கள் அமைத்து விதைக்கரணைகளை நடவு செய்ய வேண்டும். ஒரு எக்டருக்கு 15 ஆயிரம் விதைக்கரணைகளை நடவு செய்யலாம்.

உர நிர்வாகம் எக்டருக்கு

தொழு உரம் (அ)

கம்போஸ்ட் (டன்) 25

தழைச்சத்து (கிலோ) 60

மணிச்சத்து (கிலோ) 60

சாம்பல்சத்து (கிலோ) 160

**அறுவடை:** மரவள்ளி 10 மாதத்தில் அறுவடைக்கு வரும். தென்னையில் ஊடுபயிர் செய்வதால் கிடைக்கும் லாபம் ஒரு எக்டரில் ரூ.8000 ஆகும்.

**மாவுப்பூச்சி கட்டுப்பாடு**

ஏப்ரல் 13,2010,16:51 IST



மாவுப்பூச்சிகள் உடல் முழுவதும் வெள்ளை நிறத்திலான மாவு மற்றும் மெருகுப் பூச்சியுடன் கூடிய 2.2 மி.மீ. நீளம் மற்றும் 1.5 மி.மீ. நீள்வட்டமான பருமனும் உடைய மிகச்சிறிய பூச்சியாகும். இளஞ் சிவப்பு நிறத்திலும் சில வகை கருஊதா மற்றும் மஞ்சள் நிறத்திலும் காணப்படும். மாவுப்பூச்சிகளின் உடலின் பக்கவாட்டிலும் பின் பகுதியிலும் மெழுகு போன்ற இணை நீட்சி இழைகள் காணப்படும். இப்பூச்சிகளின் கால் மற்றும் கொம்புகள் நன்கு வளர்ச்சியடைந்திருக்கும்.

**தாக்கும் பயிர்கள்:** பப்பாளி, பருத்தி, கொய்யா, அவரை, மரவள்ளி, செம்பருத்தி, எள், நிலக்கடலை, சூரியகாந்தி, வெண்டை, கத்தரி, மல்பெரி.

**தாக்குதல் அறிகுறிகள்:** பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறி, வளர்ச்சிகுன்றி காய்ந்து காணப்படும். பாதிக்கப்பட்ட பயிர்களில் சிகப்பு மற்றும் கருப்பு நிற எறும்புகளின் நடமாட்டம் காணப்படும். செடிகளின் மேல் தேன் போன்ற பளபளக்கும் திரவம் காணப்படும்.

**பூச்சி கட்டுப்பாடு:** இப்பூச்சியின் சேதம் குறைவாக இருக்கும்போது தாவரவியல் பூச்சிக் கொல்லிகளான வேப்பெண்ணெய் 2 சதம் கரைசல் தெளிக்கலாம். மீன் எண்ணெய் மற்றும் டீ பால் ஒட்டு திரவத்துடன் கலந்து தெளிப்பதால் நல்ல பலன் கிடைக்கும். ரசாயன பூச்சிகொல்லியான இமிடோகுளோபிரிட் 0.75 மிலி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

**குறிப்பு:** ஒரே பூச்சிகொல்லியை திரும்ப திரும்ப உபயோகிக்காமல் சுழற்சி முறையில் வெவ்வேறு பூச்சிக்கொல்லிகளை தேவைக்கேற்ப உபயோகிக்கவும். பூச்சிக்கொல்லிகளுடன் ஒட்டு திரவம் கலந்து பயன்படுத்தவும். அனைத்து விவசாயிகளின் கூட்டு முயற்சி அவசியமான ஒன்றாகும்.

**எம்.அகமது கபீர், பி.எஸ்சி (அக்ரி), எம்.பி.ஏ., வேளாண்மை ஆலோசகர், தாராபுரம், 95004 48077.**

**கரும்பில் வெள்ளை ஈ கட்டுப்பாடு**

ஏப்ரல் 13,2010,16:50 IST



சாகுபடியாளர்களே! கரும்பு பயிரில் ஆங்காங்கே சில பகுதிகளில் இலைகள் இளஞ்சிவப்பு நிறமாக மாறி வளர்ச்சி குன்றி காணப்படுகின்றதா என்று கண்காணியுங்கள்.

அந்த இலைகளின் பின்புறத்தினை உற்றுநோக்குங்கள். சிறிய, சாம்பல்நிறம் அல்லது கருப்புநிற, நீள்வட்டவடிவ, பூச்சிகள் நகராமல் ஒட்டியிருக்கின்றனவா என்று கண்காணியுங்கள். அப்பூச்சிகள் வெண்ணிற மாவு போன்ற இழைக ளுடன் காணப்படும். அப்படியாயின் உங்கள் கரும்பு பயிரில் வெள்ளை ஈ தாக்குதல் ஏற்பட்டிருக்கலாம்.

**உகந்த சூழ்நிலைகள்:** நட்ட பயிரைவிட கட்டைப்பயிரில் வெள்ளை ஈ தாக்குதல் அதிகம் காணப்படும். தழைச்சத்து குறைபாடு, மண்ணில் களர்த்தன்மை, வடிகால் வசதிகுறைபாடு, வறட்சிஆகிய சூழ்நிலைகளில் விரைந்துபரவும். கோ.க 671 மற்றும் கோ 62198, கோ 86032 போன்ற ரகங்கள் வெள்ளை ஈ தாக்குதலுக்கு எளிதில் இலக்காகின்றன.

**கட்டுப்பாடு:** கரும்பில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த, ஒருங்கிணைந்த முறைகளைக் கடைபிடிப்பது அவசியம். மண் பரிசோதனை செய்து களர் தன்மையைக் குறைக்க வேண்டும். சிபாரிசுப்படி தழைச்சத்து உரமிட்டு தழைச்சத்துகுறைபாட்டினை தவிர்க்க வேண்டும். வெள்ளை ஈ தாக்கிய மற்றும் காய்ந்த தோகைகளை எடுத்து அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும். தீவிரத்தாக்குதல் ஏற்பட்டால் வெள்ளை ஈ தாக்கிய மற்றும் காய்ந்த தோகைகளை எடுத்து அப்புறப் படுத்திவிட்டு, மானோகுரோட்டோபாஸ் அல்லது மாலத்தியான் மருந்தினை ஏக்கருக்கு 800 மில்லி என்ற அளவில் பயிர் முழுவதும் நனையும்படி குறிப்பாக இலையின் அடிப்பகுதி முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும்.

ராக்கர் தெளிப்பான் அல்லது கால்மிதி தெளிப்பான் கொண்டு ஒரு ஏக்கருக்கு தெளிக்க 400 லிட்டர் வரை மருந்துக்கலவை தேவைப்படும். (இவ்வகை தெளிப்பான்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி மருந்து வீதம் கலந்துகொள்ள வேண்டும்). தேவைப்பட்டால் 15 நாட்களுக்கு பின் பயிரினைப் பரிசோதித்து மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். பூச்சிமருந்து கரைசல் பயிரின் மீது நன்கு பரவி படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை (வணிகப்பெயர்கள்: சாண்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால், தனுவெட்) ஒரு லிட்டர் மருந்துக் கரைசலுக்கு அரை மில்லி என்ற அளவில் சேர்த்துக் கலக்கிக் கொள்ளுதல் அவசியம்.

இவ்வாறு கரும்பில் வெள்ளை ஈ தாக்குதல் உள்ளதா என்று கண்காணித்து, ஒருங்கிணைந்த முறைகளைக் கடைப்

பிடித்து கரும்பில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துங்கள். மேலும் உழவர்கள் தங்கள் பயிர் பாதுகாப்பு பிரச்னைகளுக்கு தக்க ஆலோசனை பெற, பாதித்தபயிர் மாதிரியுடன் அருகிலுள்ள வேளாண்மை அலுவலர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள பயிர் மருத்துவ நிலையத்தினை நேரில் அணுகவும்.

**அ.ராமலிங்கம், பேராசிரியர் மற்றும் தலைவர், பருத்திஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.**

தினத்தந்தி

ஊட்டியில் நாளை நடக்கிறது

# விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

ஊட்டி, ஏப்.15–

ஊட்டி தோட்டக்கலை இணை இயக்குனர் (பொ) சி.இஸ்ரவேல் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–

நீலகிரி மாவட்டம் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நாளை (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. நீலகிரி மாவட்ட விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதேனும் இருப்பின் தோட்டக்கலை இணை இயக்குனர், தபால்பெட்டி எண்.72, ஊட்டி என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்குமாறு நீலகிரி மாவட்ட கலெக்டரால் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

விவசாயிகள் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து தங்கள் விவசாயம் சம்பந்தப்பட்ட மின்சார இணைப்பு மற்றும் நீர் பாசனம், இடு பொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் மேற்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் நீலகிரி மாவட்ட கலெக்டரால் கேட்டு கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.